Eastern University, Sri Lanka 2004

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொதுக் கலைமாணித் தேர்வு - பகுதி-I 1999/2000 (வெளிவாரி)
(ஜனவரி-2004)

# ISL 201 Islamic Theology and Islamic History

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

1) இஸ்லாத்தின் தௌஹீத் கோட்பாட்டைப் பின்வரும் தலைப்புகளில்ஆராய்க.

(அ) அதன் வகைகள்
(ஆ) ஒரு முஸ்லிமின் வாழ்வில் அது ஏற்படுத்தும் தாக்கங்கள்

2) மனிதனுக்கப் பகுத்தறிவு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவனுக்கு வழிகாட்ட இறைதூது ஏன் அவசியமானது என்பதை 'வஹீ' பற்றிய கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

3) அல்குர்ஆனில் பல இடங்களில் தொழுகையுடன் சேர்ந்து ஸகாத் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி ஆன்மீக சமூக மேம்பாட்டிற்கு ஸகாத் எவ்வாறு உதவுகின்றது என்பதை விளக்குக.

4) நோன்பு ஒரு மனிதனுடைய ஆன்மாவை எவ்வாறு பக்குவப்படுத்துகின்றது என்பதை விளக்குக.

5) 'அல்குர்ஆன் ஏனைய வேதங்களைப் போலன்றி மனித சமுதாயம் முழுவதற்குமான இறைவழிகாட்டலாகும்' எனும் கூற்றை அல்குர்ஆனின் அற்புதத் தன்மைகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

6) மனிதன் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தைத் தெளிவுபடுத்துக.

7) கிலாபத் முடியரசாக மாற்றப்பட்டதனால் இஸ்லாமிய வரலாற்றில் ஏற்பட்ட விளைவுகள் எவை என ஆராய்க.

8) உமையா ஆட்சியில் அரசாங்கத்துக்கு வருமானம் பெறப்பட்ட வழிமுறைகளை விளக்கிக் கூறி அவை செலவிடப்பட்ட பான்மையை எடுத்துரைக்க.

**********